# SRM

INSTITUTE OF SCIENCE & TECHNOLOGY

*(Deemed to be University u/s 3 of UGC Act, 1956)*

## எஸ்.ஆர்.எம்.அறிவியல் மற்றும் தொழில் நுட்பக்கல்வி நிறுவனம்
## எஸ்.ஆர்.எம். சட்டப்பள்ளி

# எட்டாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்குவாதப்போட்டி 2026



**அக்டோபர் 9, 10 & 11, 2026**

**வாதிடு । ஆராய்ந்திடு । நீதி முன்னேற்றிடு**

ALL INDIA REPORTER PVT LTD · AIR · NAGPUR

| NAAC | Category I | nirf | QS | THE World University Rankings | Shanghai Ranking | nature INDEX | Green Metric |
|---|---|---|---|---|---|---|---|
| A++ | Category I with 12B Status | (2025) Ranked 17th University | (2026) World Ranking one among 44 Indian Universities | (2025) World Ranking one among 91 Indian Universities | (2025) World Ranking Ranked 8-9 in Indian Universities | (2025) World Ranking one among 18 Indian Universities | (2024) World Ranking one among 3 Indian Universities |

**எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்**

**எஸ்.ஆர்.எம். சட்டப்பள்ளி**

வழங்கும்

**எட்டாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்குவாதப்போட்டி**

**9, 10 மற்றும் 11 அக்டோபர் 2026**

எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், எஸ்.ஆர்.எம். சட்டப் பள்ளியை 2014 ஆம் ஆண்டு நிறுவியது.

எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், இந்தியாவின் முன்னணி தனியார் உயர்கல்வி நிறுவனங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. இந்நிறுவனம் தேசிய மதிப்பீடு மற்றும் தரச்சான்றுக் குழுவான (NAAC) மூலம் A++ தரச்சான்றைப் பெற்றுள்ளது.

மேலும், NIRF 2025 தரவரிசையில், எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், எஸ்.ஆர்.எம். சட்டப் பள்ளி, இந்திய அளவில் 25-ஆம் இடத்தைப் பெற்றுள்ளது. இதன் மூலம் எஸ்.ஆர்.எம். சட்டப் பள்ளி, இந்தியாவின் முன்னணி சட்டக் கல்வி நிறுவனங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது.

எஸ்.ஆர்.எம். சட்டப் பள்ளியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களும், தகுதி மற்றும் அனுபவம் வாய்ந்த பேராசிரியர்களும் உள்ளனர். இங்கு மூன்று ஆண்டு சட்டப் படிப்பு, ஐந்து ஆண்டு ஒருங்கிணைந்த சட்டப் படிப்புகள் மற்றும் முதுகலைச் சட்டப் படிப்பு ஆகியவை பயிற்றுவிக்கப்படுகின்றன. மேலும், சட்டம் சார்ந்த பல்வேறு துறைகளில் ஆராய்ச்சிப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இங்கு பயிற்றுவிக்கப்படும் சட்டப் பாடத்திட்டங்கள் அனைத்தும் இந்திய பார் கவுன்சிலின் விதிமுறைகள் மற்றும் பரிந்துரைகளுக்கு இணங்க அமைக்கப்பட்டுள்ளன.

சட்டப் பாடங்களுடன், மாணவர்களின் பல்துறை அறிவையும் புரிதலையும் மேம்படுத்தும் வகையில் அரசியல் அறிவியல், சர்வதேச உறவுகள், இந்திய வரலாறு உள்ளிட்ட தொடர்புடைய பாடங்களும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

தரமான சட்டக் கல்வி, நடைமுறைப் பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் பல்துறை அறிவு ஆகியவற்றை ஒருங்கிணைத்து, திறமையான மற்றும் சமூகப் பொறுப்புணர்வு கொண்ட எதிர்கால சட்ட வல்லுநர்களை உருவாக்குவதே எஸ்.ஆர்.எம். சட்டப் பள்ளியின் முக்கிய நோக்கமாகும்.

தரமான சட்டக் கல்வி, நடைமுறைப் பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் பல்துறை அறிவு ஆகியவற்றை ஒருங்கிணைத்து, எதிர்கால சட்ட வல்லுநர்களை உருவாக்குவதே எஸ்.ஆர்.எம். சட்டப்பள்ளியின் முக்கிய நோக்கமாகும்.

எஸ்.ஆர்.எம் சட்டப்பள்ளியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் உள்ளனர்.

இங்கு மூன்று ஆண்டு சட்டப்படிப்பும், ஐந்து ஆண்டு சட்டப்படிப்பும், முதுகலைச் சட்டப்படிப்பும் பயிற்றுவிக்கப்படுகிறது மற்றும் சட்டம் சார்ந்த ஆராய்ச்சியும் மேற்கொள்ளப்படுகிறது.

இங்கு பயிற்றுவிக்கப்படும் பாடங்கள் அனைத்தும் இந்திய பார் கவுன்சிலால் பரிந்துரைக்கப்பட்டதாகும்.

சட்டப் பாடங்கள் தவிர அரசியல் அறிவியல், சர்வதேச உறவுகள், இந்திய வரலாறு போன்ற பாடங்களும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

## எட்டாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்குவாதப்போட்டி

**9, 10 மற்றும் 11 அக்டோபர் 2026**

### பொருளடக்கம்


| வரிசை எண் | விவரங்கள் | பக்க எண் |
|---|---|---|
| 1 | அதிகாரப்பூர்வ அழைப்பு | 5 |
| 2 | வழக்கின் பொருண்மைகள் | 6-11 |
| 3 | விதிமுறைகள் | 12-20 |
| 4 | நிகழ்வுகள் | 20 |
| 5 | விருதுகள் | 21 |
| 6 | பதிவுப் படிவம் | 23 |
| 7 | உறுதிமொழி படிவம் | 24 |

## எட்டாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்குவாதப்போட்டி

**9, 10 மற்றும் 11 அக்டோபர் 2026**

### அதிகாரப்பூர்வ அழைப்பு

எங்களது எஸ்.ஆர்.எம். சட்டப் பள்ளியில், வருகின்ற அக்டோபர் 9, 10 மற்றும் 11 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ள எட்டாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்குவாதப் போட்டிக்கு தங்களை வரவேற்று அழைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

இப்போட்டியில் பங்கேற்க விரும்பும் சட்டக் கல்லூரிகள், அக்டோபர் 5 ஆம் தேதி மாலை 5.00 மணிக்குள், Google Form வாயிலாகத் தங்களது அணியின் பெயர் மற்றும் தொடர்புடைய விவரங்கள், பதிவுக் கட்டணம் செலுத்தியதற்கான ரசீது மற்றும் பதிவுப் படிவம் ஆகியவற்றைப் பதிவேற்றம் செய்து, தங்களது அணியைப் பதிவு செய்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**பேராசிரியர் முனைவர் இந்திரநாத் குப்தா**
**புல முதல்வர்**
**எஸ்.ஆர்.எம். சட்டப்பள்ளி**

**எட்டாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்குவாதப்போட்டி**

**9, 10 மற்றும் 11 அக்டோபர் 2026**

## <u>வழக்கின் பொருண்மைகள்</u>

புதுவளம் எனும் நாடு, இயற்கைப் பன்முகத்தன்மை கொண்ட மக்களாட்சி நாடாகும். இங்கு செம்பொன் நதி, வர்த்தனா எனும் மாநிலத்தின் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் உற்பத்தியாகி, தென்கிழக்கு திசையில் பாய்ந்து, மகிழநாடு எனும் மாநிலத்தின் வழியாகக் கடலைச் சென்றடைகிறது. இந்நதி, இரு மாநிலங்களின் வேளாண்மை, குடிநீர், மீன்பிடிப்பு ஆகியவற்றிற்கும், காடுகள், பல்வேறு வனவிலங்குகள் மற்றும் அரிய வகை மூலிகைகள், ஆகியவற்றின் வாழிடமாகவும், முக்கிய ஆதாரமாகவும் விளங்குகிறது. இவ்வாறு, செம்பொன் நதி வர்த்தனா மாநிலத்தைத் தனது மேல்படுகை மாநிலமாகவும், மகிழநாடு மாநிலத்துடன் சேரமலை மாநிலம் மற்றும் முத்தூர் ஒன்றியப் பிரதேசத்தைத் தனது கீழ்ப்படுகைப் பகுதிகளாகவும் கொண்டுள்ளது.

மேலும், பல ஆண்டுகளாக செம்பொன் நதிநீரைப் பகிர்ந்து கொள்வது, பயன்படுத்துவது மற்றும் ஒழுங்குபடுத்துவது தொடர்பாக வர்த்தனா மாநிலத்திற்கும் மகிழநாடு மாநிலத்திற்கும் இடையே நீண்டகாலத் தகராறு நிலவி வருகிறது. மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர் தாவா தகராறுகள் சட்டம், 1956-இன் கீழ் அமைக்கப்பட்ட செம்பொன் நதிநீர் தீர்ப்பாயம், 2007-ஆம் ஆண்டு தனது தீர்ப்பை வழங்கி, சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கிடையேயான நதிநீரைப் பகிர்ந்தளித்தது.

இத்தீர்ப்பாயத்தின் தீர்ப்பை எதிர்த்து, வர்த்தனா மாநிலமும் மகிழநாடு மாநிலமும் புதுவளம் நாட்டின் உச்ச நீதிமன்றத்தை அணுகினர். பிறகு, 2018-ஆம் ஆண்டு, புதுவளம் உச்ச நீதிமன்றம், மேற்கண்ட தீர்ப்பாயத்தின் இறுதித் தீர்ப்பில் சில அம்சங்களை மாற்றியமைத்து, செம்பொன் நதிநீரை அதன்

அனைத்து படுகை மாநிலங்களும் பயன்படுத்திப் பகிர்ந்து கொள்ள வேண்டிய முறையைத் தீர்மானித்தது.

மேலும், நீதிமன்றத்தால் மாற்றியமைக்கப்பட்ட தீர்ப்பாயத்தின் தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதற்காக, உரிய ஆணையத்தையும் குழுவையும் அமைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. இதன் அடிப்படையில், ஒன்றிய அரசாங்கம் செம்பொன் நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் செம்பொன் நீர் ஒழுங்குமுறை ஆணையம் ஆகியவற்றை அமைத்தது. மேலும், நீதிமன்றத்தால் மாற்றியமைக்கப்பட்ட தீர்ப்பை நடைமுறைப்படுத்துதல், மாநிலங்களுக்கிடையேயான நீர் பகிர்வை ஒழுங்குபடுத்துதல் மற்றும் நதிநீர் பகிர்வு தொடர்பான பிரச்சினைகளை நிர்வகித்தல் ஆகிய அனைத்து பொறுப்புகளும் அந்த மேலாண்மை ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

வர்த்தனா மாநிலம், இந்நதியின் தடத்தில் ஏற்கனவே வானம்பாடி அணை மற்றும் வாகினி அணை ஆகியவற்றைக் கட்டியுள்ள நிலையில், மீண்டும் தனது மாநில எல்லைக்குள் செம்பொன் நதியின் குறுக்கே, வாண்காடு எனும் பகுதியில், "வாண்காடு சமநிலை நீர்த்தேக்கத் திட்டம்" எனும் திட்டத்தை 2024-ஆம் ஆண்டு அறிவித்தது. மேலும், இதற்கான விரிவான திட்ட அறிக்கையை மத்திய நீர் ஆணையத்திடம் சமர்ப்பித்தது. வர்த்தனா அரசின் கூற்றுப்படி, இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:

1. வளர்ந்து வரும் நீர்த்தனூர் நகரத்திற்கு அடிப்படை குடிநீர் வழங்குதல்;
2. அதிக மழைக்காலங்களில் வீணாகும் உபரி நீரைச் சேமித்தல்;
3. வறட்சி காலங்களில் நீர் சேகரிப்பு மற்றும் நீர்வளப் பாதுகாப்பை உறுதி செய்தல்;
4. பொருளாதார மேம்பாட்டில் முக்கியத்துவம் கொண்ட மேலூர் நகரின் மின் தேவையைப் பூர்த்தி செய்ய சுமார் 400 மெகாவாட் நீர்மின் உற்பத்தி நிலையம் அமைத்தல்; மற்றும்

5. கனமழைக் காலங்களில் நீர்பகிர்வை ஒழுங்குபடுத்துதல்.

மேலும், வர்த்தனா மாநிலம், "இத்திட்டம் உச்ச நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்ட நீர்ப் பகிர்வின்படியே இயக்கப்படும்" என்றும், மகிழநாடு மற்றும் பிற கீழ்ப்படுகை மாநிலங்களுக்குரிய நீரின் அளவில் எவ்விதப் பாதிப்பும் ஏற்படாது என்றும் உறுதியளித்தது.

இதற்கிடையில், முன்மொழியப்பட்ட நீர்த்தேக்கப் பகுதி, இரு மாநிலங்களுக்கும் இடையே பரவியுள்ள 'செம்பொன் வனச் சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த நிலப்பரப்பு' எனப்படும் தொடர்ச்சியான வனப்பகுதியின் ஒரு பகுதியாக அமைந்துள்ளது. இப்பகுதியில் சிறுத்தைகள், காட்டெருமைகள், அரியவகை சாம்பல் நிற அணில்கள், நான்கு கொம்பு வெளிமான்கள் போன்ற வன உயிரினங்களும், அர்ஜுனா மற்றும் அஞ்சான் போன்ற முக்கியத்துவம் வாய்ந்த மர வகைகளும் காணப்படுகின்றன. மேலும், இப்பகுதி உள்நாட்டிற்கே உரிய, அழியும் நிலையில் உள்ள மற்றும் அழிவின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள பல்வேறு உயிரினங்களின் வாழிடமாகவும் விளங்குகிறது. இப்பகுதி யானைகள் இடம்பெயரும் முக்கியமான வழித்தடமாகவும் அமைந்துள்ளது.

இத்திட்டத்திற்கு பொதுமக்களும் இயற்கை ஆர்வலர்களும் பல தரப்பட்ட கருத்துகளைத் தெரிவித்தனர். இதனையடுத்து, வர்த்தனா மாநிலம், இத்திட்டத்தினால் நீரில் மூழ்கும் என மதிப்பிடப்பட்ட சுமார் 4,800 ஹெக்டேர் நிலப்பரப்பிற்கு மாற்றாக வேறு பகுதியில் நிலத்தை ஒதுக்குவதாக உறுதியளித்தது. மேலும், இழப்பீட்டு காடுவளர்ப்பு நிதிச் சட்டம், 2016-ன் கீழ் 2,700 ஹெக்டேர் பரப்பளவில் ஈடுசெய்யும் காடுகளை உருவாக்குவதாகவும் தெரிவித்தது. மேலும், வர்த்தனா மாநிலம், இத்திட்டம் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கும் என்றும், பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த மேலூர் நகரத்தின் மின் தேவையைப் பூர்த்தி

செய்வதோடு, வளர்ந்து வரும் “நீர்த்தனூர்” நகரத்தின் அடிப்படை குடிநீர் தேவையையும் பூர்த்தி செய்ய உதவும் என்றும் தெரிவித்துள்ளது.

இதனுடன், ‘இயற்கைக் காவலன்’ எனும் தனியார் நிறுவனம் 2023-ஆம் ஆண்டு ஓர் அறிக்கையை வெளியிட்டது. அந்த அறிக்கையில், மகிழநாடு மற்றும் செம்பொன் நதியின் கீழ்ப்படுகையில் அமைந்துள்ள பிற மாநிலங்கள் ஆண்டுதோறும் சுமார் 400 டி.எம்.சி. உபரி நீரை கடலுக்குச் செல்லவிடுவதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இவ்வறிக்கையை வர்த்தனா மாநிலம் தனது திட்டத்திற்கு ஆதரவாக மேற்கோள் காட்டியது.

இந்நிலையில், மேற்கூறிய திட்டம் செயல்படுத்தப்பட்டால், தங்களுக்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள நதிநீர் பகிர்வு பாதிக்கப்படும் என்றும், தங்கள் மாநிலத்தின் நீர்வளம் மற்றும் வேளாண் பாசனம் பாதிக்கப்படும் என்றும் கூறி, மகிழநாடு மாநிலம் 2024-ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தின் முன் வழக்கு தொடர்ந்தது. இதையடுத்து, நீதிமன்றம் அதனை விசாரித்து, மேற்கூறிய விரிவான திட்ட அறிக்கையை இறுதித் திட்டமாகக் கருத முடியாது என்றும், மேலும், 2018-ஆம் ஆண்டின் தீர்ப்பின்படி உருவாக்கப்பட்ட ஆணையம் இவ்வனைத்தையும் பரிசீலனை செய்து உரிய முடிவை எடுக்க வேண்டும் என்றும் வழிநடத்தியது.

வர்த்தனா மற்றும் மகிழநாடு மாநிலங்கள், இந்நதியின் சுற்றுச்சூழல் சமநிலையைப் பாதுகாத்தல் மற்றும் நிலையான வளர்ச்சிக்கு வழிவகுக்கும் கோட்பாடு, தற்போதைய தலைமுறைக்கும் எதிர்கால தலைமுறைக்கும் இடையிலான சமத்துவக் கோட்பாடு (Intergenerational Equity Doctrine), பொது நம்பிக்கைக் கோட்பாடு (Public Trust Doctrine) போன்ற கோட்பாடுகளை முன்வைத்து வாதிட்டன. இதனைத் தொடர்ந்து, அவ்வாணையம் இத்திட்டத்தைப் பரிசீலித்து, சில திருத்தங்களை மேற்கொள்ளுமாறு குறிப்பிட்டு, திருத்தப்பட்ட அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தியது.

2025-ஆம் ஆண்டில், வர்த்தனா மாநிலம் திருத்தப்பட்ட விரிவான திட்ட அறிக்கையைச் சமர்ப்பித்தது. மேலும், இதில் வர்த்தனா மாநிலம் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டை மேற்கொண்டு, இத்திட்டத்தினால் சுற்றுச்சூழலுக்கு பெரும் பாதிப்பு ஏற்படாது எனக் குறிப்பிடும் சுற்றுச்சூழல் அனுமதிச் சான்றையும் இணைத்து சமர்ப்பித்தது.

அதனைத் தொடர்ந்து, இயற்கை ஆர்வலர்கள் எதிர்ப்பு தெரிவித்ததோடு, “பொன்னுலக நண்பர்கள்” என்ற அரசு சாரா இயற்கை அமைப்பு புதுவளம் நாட்டின் உச்ச நீதிமன்றத்தை அணுகி வழக்கு தொடர்ந்தது. இவ்வழக்கில், மகிழநாடு வேளாண்மை நலச்சங்கம் மற்றும் “வர்த்தனா வாண்காடு வாழ் நண்பர்கள்” என்ற இரு அரசு சாரா இயக்கங்களும் வழக்கில் ஆதரவாளர்களாகத் தலையீட்டு மனுக்களைச் சமர்ப்பித்தன. மேலும், இதனை நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

இதற்கிடையே, மகிழநாடு மற்றும் முத்தூர் ஒன்றியப் பிரதேசம் ஆகியவை தங்களது மாநில மற்றும் ஒன்றியப் பிரதேச சட்டசபைகளில் வாண்காடு சமநிலை நீர்த்தேக்கத் திட்டத்தை எதிர்த்து தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளன.

மேற்கூறியவாறு, அரசு சாரா இயக்கங்கள் உச்ச நீதிமன்றத்தின் முன் புதுவளம் அரசியலமைப்புச் சட்டம், 1950 மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டங்களை முன்னிறுத்தி தீர்ப்பு கோரிய நிலையில், மகிழநாடு மாநிலம், 2018-ஆம் ஆண்டு வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர் தாவா தகராறுகள் சட்டம்,1956 ஆகியவற்றை முன்னிறுத்தி, தங்களுக்கு சாதகமான தீர்ப்பை வழங்குமாறு புதுவளம் உச்ச நீதிமன்றத்தைக் கோரி வழக்கு தொடர்ந்துள்ளது.

## எழுவினா

வழக்கின் பொருண்மைகளை அடிப்படையாகக் கொண்டு, பங்கேற்கும் குழுக்கள் தங்களின் சொந்த எழுவினாக்களை உருவாக்கி முன்வைக்க அனுமதிக்கப்படுகின்றன. எனினும், ஒவ்வொரு குழுவும் நான்கு எழுவினாக்களை மட்டுமே கட்டாயமாக முன்வைக்க வேண்டும்.

## குறிப்பு:

புதுவளம் நாட்டின் சட்டங்கள் இந்திய சட்டங்களுக்கு சமமாக கருதப்படுகின்றன. எனவே, இந்திய அரசியலமைப்பு,1950; மாநிலங்களுக்கு இடையேயான நதி நீர் தகராறுகள் சட்டம்,1956; வன உயிர் (பாதுகாப்பு) சட்டம்,1972 சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம், 1986; வன (பாதுகாப்பு) சட்டம், 1980; சுற்றுச்சூழல் மற்றும் நீர்வளச் சட்டங்கள் ஆகியவற்றின் இணையான சட்டங்களும் கொள்கைகளும் புதுவளம் நாட்டிற்கு பொருந்தும்.

## எட்டாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்குவாதப்போட்டி

**9, 10 மற்றும் 11 அக்டோபர் 2026**

### விதிமுறைகள்

**1. போட்டி நடக்கும் தேதி மற்றும் இடம்:**

எட்டாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்கு வாதப்போட்டி-2026 வருடம் அக்டோபர் 9, 10 மற்றும் 11 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது. இப்போட்டியின் வழக்காடு மொழியானது தமிழ், எனவே அனைத்து சுற்றுகளும் வாதுரைகளும் தமிழ்மொழியில் மட்டுமே இருக்க வேண்டும்

**2. அணியினருக்கான தகுதிகள்:**

1. இப்போட்டியில் மூன்றாண்டு சட்டப்படிப்பு (அ) ஐந்தாண்டு சட்டப்படிப்பு பயின்று வரும் மாணவர்கள் மட்டும் பங்கு கொள்ள இயலும்.
2. ஒவ்வொரு கல்லூரி/பல்கலைக்கழகத்திற்கு அதிகபட்சம் இரண்டு அணிகள் மட்டும் அனுமதிக்கப்படுவர்.
3. ஒவ்வொரு அணிக்கும் இரண்டு வழக்குரைஞர்கள் மற்றும் ஒரு ஆராய்ச்சியாளர் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

**2.1. முதல் 8 அணிகள் முதல் நிலை சுற்றிலிருந்து கீழ்க்கண்ட விதிமுறைகளின் படி தேர்ந்தெடுக்கப்படுவர்.**

4. முதல்நிலை சுற்றின் இரண்டு சுற்றுகளிலும் பெற்ற மொத்த மதிப்பெண்களின் அடிப்படையில் காலிறுதிச் சுற்றுக்கு தேர்ந்தெடுக்கப்படுவர்.
5. மொத்தப்மதிப்பெண்களில் அணிகளுக்கிடையே சமநிலை மதிபெண் ஏற்படுமாயின் முதல்நிலைச் சுற்றில் வெற்றி பெற்ற மதிப்பீடுகளின் அடிப்படையில் காலிறுதி நிலைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவர்.

6. வெற்றி பெற்ற மதிப்பீடுகளில் அணிகளுக்கிடையே சமநிலை தொடருமாயின் முதல்நிலைச் சுற்றுகளில் வாதத் திறனில் பெற்ற மொத்த மதிப்பெண்களின் அடிப்படையில் காலிறுதிக்கு தேர்ந்தெடுக்கப்படுவர்.
7. மேற்குறிப்பிட்ட நிலைகளை கடந்து அணிகளுக்கிடையே சமநிலை தொடருமாயின் அணிகள் சமர்ப்பித்த எழுத்துபூர்வாமான வாதுரையில் பெற்ற அதிக மதிப்பெண்களின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவர்.
8. இந்த மாதிரி நீதிமன்ற போட்டி சம்மந்தமாக ஏதேனும் மாறுப்பட்ட கருத்துகள் ஏற்படின் மாதிரி நீதிமன்ற ஒருங்கிணைப்பு குழுவின் முடிவே இறுதியானது.

### 2.2 தகுதி நீக்கம்

9. போட்டியாளர்கள் வாதிடும் போது (அ) போட்டி நடக்கும் எவ்வித நேரங்களிலும் அவர்களின் அடையாளத்தையோ, அவர்கள் சார்ந்த கல்லூரியின் அடையாளத்தையோ அறிந்து கொள்ளும் வகையில் எவ்விதமான அடையாளத்தையும், அடையாள அட்டைகளையும் பயன்படுத்தக்கூடாது. மீறும் பட்சத்தில் அந்த அணி உடனடியாக தகுதி நீக்கம் செய்யப்படும்.

10. மாணவ வழக்குரைஞர்கள், தங்கள் வாதத்தினை நீதிபதிகளிடம் எடுத்துரைக்கும் போதோ அல்லது நீதிபதிகளின் தீர்ப்பிற்கு பிறகோ நீதிமன்றத்தில் பின்பற்றும் நடைமுறை விதிகளை பின்பற்றி மிகவும் கண்ணியத்துடன் நடந்துக்கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி போட்டியிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்படுவார்கள்.

## 3. அணி பதிவு செய்யும் முறை:

11. 10.09.2026 முதல் பதிவு செய்யலாம். அணிகள் கீழ்க்கண்ட GOOGLE FORM-இல் பதிவு செய்ய வேண்டும்.
12. பதிவு செய்த அணிகள், பதிவுப் படிவம் மற்றும் முதல்வரிடம் இருந்து பெற்ற ஒப்புதல் படிவம் இரண்டையும் GOOGLE FORM-இல் பதிவேற்றம் (UPLOAD) செய்யவேண்டும்.
13. பதிவுக்கட்டணம் ரூ.3,000/- (ஒரு அணிக்கு).
14. பதிவுக் கட்டணம் NEFT PAYMENT மூலம் மட்டுமே செலுத்தப்பட வேண்டும் செலுத்தப்பட்டதிற்கான ஒப்புகை சீட்டை (TRANSACTION RECEIPT) GOOGLE FORM இல் பதிவேற்றம் (UPLOAD) செய்யவேண்டும்.

**பதிவு இணைப்பு:** https://forms.gle/UojoVGLLBRSTvExT7

**வங்கி கணக்கின் விபரம்**

| |
|---|
| **INDIAN BANK, SRM UNIVERSITY, KATTANKULATHUR** |
| **A/C NO: 6314094173** |
| **A/C NAME: SRM SCHOOL OF LAW** |
| **IFSC CODE: IDIB000S181** |

**4. சீருடை**

பங்கேற்பாளர்கள், வழக்குரைஞர்கள் மாணவர்க்குரிய சீருடையில் மட்டுமே போட்டி நடைபெறும் மாதிரி நீதிமன்ற அறைக்குள் அனுமதிக்கப்படுவர்.

**5. வாதுரையின் உள்ளடக்கம்**

- அட்டைப்பக்கம்
- வழக்கின் பட்டியல்
- சொற்றொடரின் சுருக்கப்பட்டியல்
- நீதிமன்ற ஆள்வரம்பு

- எழுவினாக்கள்
- சுருக்க வாதுரை
- விரிவான வாதுரை
- இறைஞ்சுதல்

**5.1. வாதுரையின் மதிப்பீடு.**

வாதுரையை மதிப்பிடுவதற்காக போட்டியின் ஒருங்கிணைப்பாளர் குழு அனுபவமிக்க நீதிபதி குழு ஒன்றை அமைக்கும். அந்த குழு வாதுரையை தனித்தனியாக 0-70 வரையிலான மதிப்பெண்களின் மதிப்பிடும் காரணிகள் கீழ் குறிப்பிட்டுள்ளது.

| **வ.எண்** | **காரணிகள்** | **மதிப்பெண்கள்** |
|---|---|---|
| 1 | பொருண்மை குறித்த தெளிவு | 10 |
| 2 | வாதுரை ஆராய்ச்சியின் தன்மை | 10 |
| 3 | சட்டப்பகுப்பாய்வு, சட்ட முதுமொழி, சட்டச்சொற்கள், கோட்பாடுகள் | 10 |
| 4 | முன்தீர்ப்புகளை கையாளும் விதம் | 10 |
| 5 | படைப்பு – அட்டைப்பக்கம்; வழக்கின் பட்டியல்; சொற்றொடரின் சுருக்கப்பட்டியல் | 10 |
| 6 | நீதிமன்ற ஆள்வரம்பு | 5 |
| 7 | எழுவினாக்கள்; சுருக்க வாதுரை; விரிவான வாதுரை | 10 |
| 8 | இறைஞ்சுதல் | 5 |
| | **மொத்த மதிப்பெண்கள்** | 70 |

**5.2. அபராதம்:**

அபராதமானது எதிர்மறை மதிப்பெண்களாக பின்வருமாறு வழங்கப்படும்

15. குறிப்பிட்ட நேரத்தில் வாதுரையைச் சமர்ப்பிக்கதவறினால் 2 மதிப்பெண்கள் தலா ஒரு வாதுரைக்கு முதல் 12 மணி நேரத்திற்கு குறைக்கப்படும் மற்றும் 1 மதிப்பெண் தலா ஒவ்வொரு ஆறு மணி நேரத்திற்கு குறைக்கப்படும்.
16. தவறான அட்டைக்கு 1 மதிப்பெண் தலா ஒரு வாதுரைக்கு குறைக்கப்படும்.
17. கொடுக்கப்பட்ட பக்கங்களின் எண்ணிக்கையை மீறினால் 1 மதிப்பெண் தலா ஒவ்வொரு கூடுதல் பக்கத்திற்கு குறைக்கப்படும். அதிகபட்ச பக்கங்களின் எண்ணிக்கை 30 ஆகும்.
18. கொடுக்கப்பட்ட உள்ளடக்கத்தைப் பின்பற்றாமலோ / தேவையற்ற உள்ளடக்கத்தைச் சேர்த்தாலோ 1 மதிப்பெண் குறைக்கப்படும்.
19. குறிப்பிட்டுள்ள விதிகளை மீறுவது: எழுத்துரு - லதா; எழுத்து அளவு -12; வரிகளுக்கான இடைவெளி- 1.15; ஒவ்வொரு தவறுக்கும் தலா 3 மதிப்பெண்கள்; தவறான எழுத்து அளவு: 0.5 மதிப்பெண்கள் தலா ஒரு பக்கம்; தவறான இடைவெளி : 0.5 மதிப்பெண்கள் தலா ஒரு பக்கம்; தவறான நிறக்குறிப்பு (அட்டைப் பக்கம்) : 2 மதிப்பெண்கள் ஒவ்வொரு வாதுரைக்கும்.

மனுதாரரின் வாதுரை மேல் அட்டை நீல நிறத்திலும், எதிர் மனுதாரரின் வாதுரை மேல் அட்டை சிகப்பு நிறத்திலும் இருக்க வேண்டும்.

**6. வாய்மொழிச்சுற்று வடிவம் மற்றும் மதிப்பிடும் முறை:**

**6.1. தகுதிச் சுற்று**

- தகுதிச் சுற்று இரண்டு சுற்றுகளாக நடத்தப்படும்.ஒவ்வொரு சுற்றிலும் அணிகள் வாதி / பிரதிவாதியாக வாதிடுவர்.

- வாதி / பிரதிவாதி குலுக்கல் முறையில் தோந்தெடுக்கப்படுவார் ஒவ்வொரு அணியும் ஒவ்வொரு அணிகளை ஒவ்வொரு அமர்வுகளில் குலுக்கல் முறையில் சந்திப்பார்.

- ஒவ்வொரு சுற்றும் 40 நிமிடங்கள் கொண்டதாக நடத்தப்படும். அதில் ஒவ்வொரு அணிக்கும் தலா 20 நிமிடங்கள் வழங்கப்படும். இது வாதுரையை சமர்ப்பிக்க, மறுப்பு தெரிவிக்க / பதில் மறுப்பு தெரிவிக்க கொடுக்கப்படுகின்ற நேரமாகும். வாதாடும் பொருள் அடிப்படையில் கூடுதல் தமிடங்கள் வழங்கப்படும். இந்த கூடுதல் நிமிடங்கள் நீதிபதிகளின் தன்விருப்புரிமைக்கு உட்பட்டதாகும். ஒவ்வொரு தகுதிச் சுற்றும் 2 நீதிபதிகளைக் கொண்டு மதிப்பீடு செய்யப்படும்.

### 6.2. கால் இறுதிச் சுற்று

- தகுதிச் சுற்றில் முதல் 8 இடங்களைப் பிடித்த அணிகள் கால் இறுதிச் சுற்றுக்கு தகுதி பெறும். எந்த அணிகள் வாதி, பிரதிவாதியாக வாதிட வேண்டும் என்பதை குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு. கால் இறுதிச் சுற்று நடைபெறும். ஒரு கால இறுதிச் சுற்று மொத்தமாக 60 நிமிடங்கள் நடைபெறும், அதில் ஒவ்வொரு அணிக்கும் 30 நிமிடங்கள் வழங்கப்படும். இது வாதுரையை சமர்ப்பிக்க, மறுப்பு தெரிவிக்க / பதில் மறுப்பு தெரிவிக்க கொடுக்கப்படுகின்ற நேரமாகும். நேர மேலாண்மையைக் கருத்தில் கொண்டு வழக்காடுபவர் ஒருவருக்கு தலா 15 நிமிடங்களுக்கு மேல் வழக்கினை எடுத்துரைக்க அனுமதிக்க இயலாது. கூடுதல் நிமிடங்கள் நீதிபதிகளின் தன் விருப்புரிமைக்கு உட்பட்டதாகும்

- காலிறுதிச்சுற்று இரு நடுவர்களால் மதிப்பீடு செய்யப்படும். ஒவ்வொரு மாணவ வழக்குரைஞருக்கும் 0-70 மதிப்பெண்கள் வரை கொடுக்கப்பெற்று, இதில் வெற்றி பெறும் அணி முறையில் அரையிறுதிச் சுற்றுக்கு தகுதி பெறுங்கள்

### 6.3. அரை இறுதிச் சுற்று

- காலிறுதிச்சுற்றில் வெற்றி பெற்ற அணிகள் Knock Out முறையில் அரையிறுதிச் சுற்றுக்கு முன்னேறுவர்.

- ஒவ்வொரு அரை இறுதிச் சுற்றும் 90 நிமிடங்கள் நடத்தப்படும் இரு தரப்பிற்கும் 45 நிமிடங்கள் வழங்கப்படும். இது வாதுரையை சமர்ப்பிக்க, மறுப்புத் தெரிவிக்க / பதில் மறுப்பு தெரிவிக்க கொடுக்கப்படுகின்ற நேரமாகும். நேர மேலாண்மையினைக் கருத்தில் கொள்ளுதல் அணியின் அதிகாரத்திற்குட்பட்டதாயினும், ஒரு அணியில் வழக்காடுபவர் ஒருவருக்கு தலா 22 நிமிடங்களுக்கு மேல் வழக்கினை எடுத்துரைக்க அனுமதிக்க இயலாது. கூடுதல் நிமிடங்கள் நீதிபதிகளின் தன் விருப்புரிமைக்கு உட்ப்பட்டதாகும்.

- அரை இறுதிச் சுற்றில் மூன்று நீதிபதிகளைக் கொண்டு தீர்ப்பு அளிக்கப்படும்.

- ஒவ்வொரு மாணவ வழக்குரைஞருக்கும் 100 மதிப்பெண்கள் வரை கொடுக்கப்பெற்று, இதில் வெற்றி பெறும் அணி knock out முறையில் இறுதிச் சுற்றுக்கு தேர்வாகும்.

### 6.4. இறுதிச் சுற்று:

- அரையிறுதிச் சுற்றில் வெற்றி பெறும் அணிகள் Knock Out முறையில் இறுதிச் சுற்றுக்கு முன்னேறுவர்.

- இறுதிச் சுற்று 90 நிமிடங்கள் நடத்தப்படும். இரு அணிகளுக்கும் தலா 45 நிமிடங்கள் வழங்கப்படும்.

- இது வாதுரையை சமர்ப்பிக்க, மறுப்புத் தெரிவிக்க / பதில் மறுப்பு தெரிவிக்க கொடுக்கப்படுகின்ற நேரமாகும். வாதாடும் பொருள்

அடிப்படையில் கூடுதல் நிமிடங்கள் வழங்கப்படும். கூடுதல் நிமிடங்கள் நீதிபதிகளின் தன் விருப்புரிமைக்கு உடப்பட்டதாகும்.

- இறுதிச் சுற்றானது நீதிபதி குழுவால் மதிப்பீடு செய்யப்படும். ஒவ்வொரு மாணவ வழக்குரைஞருக்கும் 0-100 மதிப்பெண்கள் வழங்கப்படும். அதில் அதிகம் மதிப்பெண் பெற்ற அணியின வெற்றியாளாராக அறிவிக்கப்படுவார்கள்.

**வாய்வழி வாதங்களின் ஆணை வாய்வழி வரிசை பின்வருமாறு :**

- வாதி 1
- வாதி 2
- பிரதிவாதி 1
- பிரதிவாதி 2
- வாதியின் மறுத்தளிப்பு
- பிரதிவாதியின் துணை மறுதளிப்பு
- வாய்வழி வாதுரையின் போது எந்தவொரு மாணவ வழக்குரைஞரும் தனது அடையாளத்தையோ அல்லது அவரின் கல்லூரியின் விவரங்களையோ வெளியிட்டக்கூடாது. வாதி மறுப்புக்காக எழும்பவில்லை என்றால் பதில்-மறுப்பு ரத்து செய்யப்படுவதாக கருதப்படுகிறது.

### 6.6. வாய்வழி வழக்காடும் மதிப்பெண்கள்

மாணவ வழக்குரைஞர்களின் வாய்வழி வழக்காடும் திறனை 100 மதிப்பெண்கள் அளவில் பின்வருமாறு மதிப்பிடுவர்.

| வ.எண் | தகுதி | மதிப்பெண்கள் |
|---|---|---|
| 1 | வழக்கெழு வினா வனைதல் | 15 |
| 2 | சட்ட பகுப்பாய்வு (சட்ட சொற்கள், சட்ட முதுமொழி, சட்ட கோட்பாடுகள் பயன்படுத்தும் திறன்) | 15 |
| 3 | வழக்குகளை மேற்கோள் காட்டுதல் | 15 |
| 4 | பொருண்மைகளின் தெளிவு | 15 |
| 5 | நேரப் பகுப்பாய்வு | 10 |
| 6 | கேள்விகளுக்கு பதில் அளித்தல் | 15 |
| 7 | விவாதத்தின் திறன் | 15 |
| | **மொத்தம் மதிப்பெண்கள்** | **100** |

## 7. இதர

நீதிமன்றம் தொடர்பான விதிகளை செயல்படுத்துதல், விளக்கம் அளித்தல் மற்றும் இறுதி முடிவு ஒருங்கிணைப்பாளர் குழுவிடம் உள்ளது.

**நிகழ்வுகள்**

| நிகழ்வு | தேதி |
|---|---|
| முன்பதிவு செய்ய கடைசி நாள் | 5 அக்டோபர் 2026 |
| இதர தகவல்களுக்கான கடைசி நாள் | 5 அக்டோபர் 2026 |
| வாதுரை மென் நகல் மூலமாக சமர்ப்பிக்க கடைசி நாள் (Soft Copy) | 6 அக்டோபர் 2026 |
| வாதுரை அச்சு நகல் கிடைக்கப்பெற நாள் (Hard Copy - 6 nos) | 9 அக்டோபர் 2026 (பதிவு செய்யும் பொழுது) |
| சிறந்த ஆராய்ச்சியாளர்க்கான தேர்வு | 9 அக்டோபர் 2026 |
| தகுதிச் சுற்று மற்றும் காலிறுதிச்சுற்று | 10 அக்டோபர் 2026 |
| அரையிறுதி மற்றும் இறுதிச்சுற்று | 11 அக்டோபர் 2026 |

## எட்டாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்குவாதப்போட்டி

### 9, 10 மற்றும் 11 அக்டோபர் 2026

### விருதுகள்

| பரிசு | பரிசுத்தொகை |
|---|---|
| முதல்பரிசு | கோப்பை, சிறப்புச் சான்றிதழ், இந்தியாவின் முன்னணி சட்டத் தரவுத்தளமான All India Reporter (AIR Online) சந்தா மற்றும் ரொக்கப் பரிசு ரூ. 21,000/- |
| இரண்டாம்பரிசு | கோப்பை, தகுதிச் சான்றிதழ், இந்தியாவின் முன்னணி சட்டத் தரவுத்தளமான All India Reporter (AIR Online) சந்தா மற்றும் ரொக்கப் பரிசு ரூ. 15,000/- |
| சிறந்த மாணவ வழக்குரைஞர் | கோப்பை, சிறப்பு அங்கீகாரச் சான்றிதழ் மற்றும் ரொக்கப் பரிசு ரூ. 7,000/- |
| சிறந்தஆராய்ச்சியாளர் | கோப்பை, சிறப்பு அங்கீகாரச் சான்றிதழ் மற்றும் ரொக்கப் பரிசு ரூ. 7,000/- |
| சிறந்தவாதுரை | கோப்பை, சிறப்பு அங்கீகாரச் சான்றிதழ் மற்றும் ரொக்கப் பரிசு ரூ. 7,000/- |

**குறிப்பு:**

- ஒவ்வொரு பங்கேற்பாளருக்கும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும்.

**எட்டாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்குவாதப்போட்டி**

**9, 10 மற்றும் 11 அக்டோபர் 2026**

**தலைமை புரவலர்கள்**

முனைவர் **Y.S.R. மூர்த்தி**,
இணை துணை வேந்தர் (சட்டம்)

பேராசிரியர் முனைவர் இந்திரநாத் குப்தா
புல முதல்வர்

**தலைமை ஒருங்கிணைப்பாளர்**

திருமதி. பெ.லோகப்பிரியா

உதவிப் பேராசிரியர்

**இணை ஒருங்கிணைப்பாளர்**

திரு மு.ஜெய் கணேஷ்

உதவிப் பேராசிரியர்

## ஒழுங்கமைப்பாளர்கள்

| பெயர் | பதவி |
|---|---|
| திருமதி. மரியா ஜோசப் | உதவிப் பேராசிரியர் |
| திரு. பார்த்தீஸ்வரன் .ப | உதவிப் பேராசிரியர் |
| திரு. நிஷாந்த். ஜெ | உதவிப் பேராசிரியர் |
| திருமதி. யுவ பூர்ணிமா அ | உதவிப் பேராசிரியர் |
| செல்வி. சு. தீபிகா | உதவிப் பேராசிரியர் |
| திருமதி. சு. திவ்யா | உதவிப் பேராசிரியர் |
| திரு. ஜானேஸ்வர் ராஜ் யு | உதவிப் பேராசிரியர் |

## பதிவுப்படிவம்

தேதி: ..............................

**கல்லூரியின் விவரம்:**

- கல்லூரி பெயர்:
- முகவரி:
- தொடர்புக்கான அதிகாரி பெயர்:
- தொலைபேசி எண்:
- மின்னஞ்சல் முகவரி:

**முதல் மாணவ வழக்குரைஞர்:**

- பெயர்:
- பயிலும் ஆண்டு:
- தொடர்பு எண்:
- மின்னஞ்சல் முகவரி:

**இரண்டாம் மாணவ வழக்குரைஞர்:**

- பெயர்:
- பயிலும் ஆண்டு:
- தொடர்பு எண்:
- மின்னஞ்சல் முகவரி:

**ஆராய்ச்சியாளர் விவரம்**

- பெயர்:
- பயிலும் ஆண்டு:
- தொடர்பு எண்:
- மின்னஞ்சல் முகவரி:

## எட்டாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்குவாதப்போட்டி

**9, 10 மற்றும் 11 அக்டோபர் 2026**

### உறுதிமொழி வடிவம்

பதிவுப்பதிவில் பதிவு செய்யப்பட்ட அனைத்து விவரங்களும் உண்மையானவை. பதிவு செய்த கல்லூரி மற்றும் மாணவர்கள் கூறப்பட்ட விதிமுறைகளை போட்டியின் கடைசி வரை கடைபிடிப்பார்கள்.

**முதல் மாணவ வழக்குரைஞர்**

கையொப்பம்

**இரண்டாம் மாணவ வழக்குரைஞர்**

கையொப்பம்

**ஆராய்ச்சியாளர்**

கையொப்பம்

**கல்லூரி ஆசிரிய ஒருங்கிணைப்பாளர்**

**கையொப்பம்**

**கல்லூரி முதல்வரின்**
**கையொப்பம் மற்றும் முத்திரை**

## எட்டாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்குவாதப்போட்டி

**9, 10 மற்றும் 11 அக்டோபர் 2026**

**குறிப்புகள்:**

- எந்த சூழ்நிலையிலும் பதிவு செய்த பிறகு குழு அமைப்பில் மாற்றம் அனுமதிக்கப்படாது
- எந்தவொரு சூழ்நிலையிலும் பதிவுக் கட்டணம் திரும்பப் பெறப்படாது.
- உணவு மற்றும் தங்கும் வசதி வழங்கப்படும்.
- வளாகத்தில் உள்ள விடுதியில் பெண் மாணவ வழக்கறிஞர்கள் மற்றும் ஆண் மாணவ வழக்கறிஞர்கள் தனித்தனியாக தங்கும் வசதி வழங்கப்படும்.
- 09.10.2026 இரவு முதல் 12.10.2026 காலை வரை தங்கும் வசதி வழங்கப்படும்.
- 09.10.2026 இரவு முதல் 11.10.2026 வரை உணவு வழங்கப்படும்.
- பேருந்து நிறுத்தம்- பொத்தேரி (பொத்தேரி இரயில் நிலையம் அருகில்)- அணிகள் பொத்தேரி பேருந்து நிலையம் அல்லது பொத்தேரி ரயில் நிலையத்திற்கு தாங்களாகவே வர வேண்டும். வந்தவுடன், அவர்களுடன் ஒரு தன்னார்வலர் அவர்கள் தங்குவதற்கு நியமிக்கப்பட்ட இடத்திற்கு அழைத்துச் செல்லப்படுவார்கள்.
- **பதிவு செய்வதற்கான இணைப்பு** - https://forms.gle/UojoVGLLBRSTvExT7

**மேலும் தகவல் மற்றும் தொடர்புக்கு**


செல்வி. சு. தீபிகா- உதவிப் பேராசிரியர்
தொலைபேசி எண்- 9025002494

திரு. ஜானேஸ்வர் ராஜ் யு - உதவிப் பேராசிரியர்
தொலைபேசி எண் - 9003020248

- மின்னஞ்சல்- tamilmcc@srmist.edu.in


SRM
INSTITUTE OF SCIENCE & TECHNOLOGY
(Deemed to be University u/s 3 of UGC Act, 1956)
எட்டாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்குவாதப்போட்டி 2026
அக்டோபர் 9, 10 & 11, 2026
தலைமைப் புரவவர்
முனைவர் T.R. பாரிவேந்தர், நிறுவனர், வேந்தர்
எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக்கல்வி நிறுவனம்
புரவவர்கள்
திரு. P. ரவி பச்சமுத்து, இணை வேந்தர் (நிர்வாகம்)
எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக்கல்வி நிறுவனம்
முனைவர் R.P. சத்திய நாராயணன், தலைவர் இணை வேந்தர் (கல்வி)
எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக்கல்வி நிறுவனம்
இணை புரவவர்கள்
முனைவர் C. முத்தமிழ் செல்வன், துணை வேந்தர்
எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக்கல்வி நிறுவனம்
முனைவர் Y.S.R. மூர்த்தி, இணை துணை வேந்தர் (சட்டம்)
எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக்கல்வி நிறுவனம்
முனைவர் S. பொன்னுசாமி, பதிவாளர்
எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக்கல்வி நிறுவனம்
முனைவர் I. மைதிலி, (கூடுதல் பதிவாளர்)
எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக்கல்வி நிறுவனம்
பேராசிரியர் முனைவர் இந்திரநாத் குப்தா,
புல முதல்வர்
எஸ்.ஆர்.எம். சட்டப்பள்ளி
பகுத்தறிவின்
வழி
நீதி
சிறந்த
எதிர்காலத்திற்கான
சட்டம்